## இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் - 2013

இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்து மாற்றங்கள் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 108 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசிலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவின் பிரகாரமான விரிவான அறிக்கை காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.
நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.
எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2012 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி, உள்ளமையை உறுதிப்படுத்தாத ரூபா 323,664 பெறுமதியான 108 வகைப் பொருட்களின் பெறுமதியும் இரண்டு வெளிப்பாட நெறிக்காக பிரதான கிளையிலிருந்து வழங்கப்பட்ட ரூபா 252,542 பெறுமதியான பொருட்களின் பெறுமதியுமாக ரூபா 576,206 கூட்டுத்தொகைக்காக கணக்குகளில் தேவையான சீராக்கங்களைச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்வேறு செயற்திட்டங்கள் மற்றும் வெளிவாரிப் பாடநெறிக்காக பல்கலைக்கழக நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவினங்களின் கூட்டுத்தொகையான ரூபா 598,719 பல்கலைக்கழகத்திற்கு கிடைக்கவேண்டிய பணமாக கணக்கு வைப்பதற்குப் பதிலாக ஆண்டின் செலவினமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழகத்தின் செயற்பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட ரூபா 95,864,363 கிரயமான 10 நிலையான சொத்து விடயங்களை மீள் கணிப்பீடு செய்து கணக்குகளுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பல்கலைக்கழகத்திற்கு வெளித்தரப்பினரால் வழங்கப்பட்ட ரூபா 1,000,000 பணம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்ததன் அடிப்படையில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்கவேண்டி வட்டியான ரூபா 130,000 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

நிதிச் செயலாற்றல் கூற்றின்படி, ஆண்டின் பெறுமானத்தேய்வு ரூபா 120,963,189 ஆக இருந்ததுடன் அதற்குரிய பட்டோலைகளின் பிரகாரம் பெறுமதி ரூபா 119,689,250 ஆனமையால் அதனிடையே ரூபா 1,273,949 தொகையான வேறுபாடு வெளிப்படுத்தப்பட்டது. மேலும் சமர்ப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றின் படி நிலையான சொத்துக்களுக்கு சேர்த்தல்கள் ரூபா 100,561,348 ஆக அறிக்கையிடப்பட்ட போதிலும் அதற்குரிய

பட்டோலைகளின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 99,287,399 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 1,273,949 ஆன வேறுபாடு வெளிப்படுத்தப்பட்டது.

**2.3 பெறவேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1996 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலத்தில் நூலகப் புத்தகங்கள் மற்றும் சஞ்சீகைகளைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட ரூபா 929,684 முற்பணமும், 2011 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 3,136,709 ஒப்பந்த முற்பணமும், 02 வருடங்கள் முதல் 08 வரையான காலத்திற்கு முன்னர் வழங்கப்பட்ட ரூபா 340,206 தொகையான சேவை முற்பணமும், 12 உத்தியோகத்தர்களுக்கு 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் வழங்கப்பட்ட ரூபா 200,551 தொகையான முற்பணமுமாக ரூபா 4,607,150 கூட்டுத்தொகை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீண்ட காலமாக தொடர்ந்து காணப்பட்ட ரூபா 74,545 தொகையான கடன்பட்டோர் மீதியும் ரூபா 16,187 தொகையான கடன்கொடுத்தோர் மீதியும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 25,992,699 தொகையான செலுத்த வேண்டிய கணக்கு மீதியில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற தொகை ரூபா 3,123,018 ஆகும்.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) பல்கலைக்கழகம் மற்றும் உயர்கல்வி நிறுவனம் என்பவற்றிற்கான தாபனவிதிக் கோவை | |
| 3 ஆம் அத்தியாயத்தின் 24.8 ஆம் பிரிவு | தற்காலிக விரிவுரையாளர்களின் பூரணமான சேவைக்காலம் 02 வருடங்களுக்கு மேற்பட முடியாதிருந்த போதிலும், அதற்கு முரணாக 128 தற்காலிக விரிவுரையாளர்களுக்கு 02 வருடங்களை விஞ்சி நியமனம் வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 271(2)(அ)(ஆ) | 1995 ஆம் ஆண்டு முதல் 2012 திசெம்பர் 31 வரை செலுத்தப்படாத ரூபா 342,766 பெறுமதியான சம்பளம் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) | உப கட்டுநிதியாக ஒரு சந்தர்ப்பத்தின் போது வழங்கக்கூடிய ஆகக்கூடிய தொகை ரூபா 20,000 ஆக இருந்த போதிலும் அந்த எல்லையினை விஞ்சி 09 சந்தர்ப்பங்களின் போது ரூபா 567,050 தொகை முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | ரூபா 358,180 பெறுமதியான வழங்கப்பட்ட திகதி முதல் 06 மாத காலத்தை விஞ்சியும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத 47 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 571(2) | வைப்புச் செய்யப்பட்ட திகதி முதல் இரண்டு வருடங்களை விஞ்சிய ரூபா 1,308,558 பெறுமதியான 110 பல்வேறு வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிதிப்பிரமாணம் 1645 மற்றும் 1646 | மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகம் பயன்படுத்திய 06 வாகனங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 604,866 பெறுமதியான எரிபொருள் செலவினங்களை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் பிரமாணத்தின் பிரகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபத்தின் 3.13 ஆம் பந்தி | இயந்திரப் பொறியியலாளரின் அறிக்கை பெறப்படாமல் மீளாய்வாண்டின் பொது 09 சந்தர்ப்பங்களில் வாகன பழுதுபார்த்தல்களுக்காக ரூபா 691,665 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2006 கொள்வனவு வழிகாட்டிக் கோவை மற்றும் கைநூல் | |

| | | |
|---|---|---|
| (i) | 3.5 மற்றும் 9.3 வழிகாட்டிக்கோவை மற்றும் கொள்வனவுக் கைநூலின் 2.14.1 ஆம் பந்தி மற்றும் நிதிப்பிரமாணம் 135 | 02 சந்தர்ப்பங்களின் போது ரூபா 439,065 தொகையான வாகன பழுதுபார்த்தல் செலவினங்களுக்காக கொள்வனவு வழிகாட்டிக்கோவை ஆலோசனைகள் மற்றும் நிதிப்பிரமாணம் 135 இன் கீழான பல்கலைக்கழகத்தின் அதிகாரங்களைக் கையளித்தல் தொடர்பான எல்லை மீறப்பட்டிருந்தது. |
| (ii) | கொள்வனவுக் கைநூலின் 8.13.4 ஆம் பந்தி மற்றும் 2012 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய 2/2012 ஆம் இலக்க அரசாங்க நிதிச்சுற்றுநிருபம் | பிரயோக விஞ்ஞான பீடக் கட்டிடம் stage II, phase II நிர்மாணிப்பின் போது ஒப்பந்தப் பெறுமதியில் 13.78 சதவீதம் வரையிலான முரண்களுக்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக உயர் கல்வி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் சிபாரிசின் அடிப்படையில் மாத்திரம் ரூபா 3,786,021 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (உ) | 2010 திசெம்பர் 07 ஆந் திகதிய 150 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றுநிருபம் | புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்ததன் பின்னர் வாடகை வாகனங்கள் அகற்றப்பட வேண்டிய போதிலும் வயம்ப பல்கலைக்கழகத்தால் ஐந்து புதிய வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது வாடகை வாகனங்களுக்காக ரூபா 1,821,666 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) | பொதுத்திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2011 மார்ச் 10 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் இல.44(03)(ஆ) ஆம் பந்தி | மீளாய்வாண்டின் போது 11 விரிவுரையாளர்களுக்கு ஆராய்ச்சிப் படியாக ரூபா 1,502,392 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த ஆண்டின் போது செய்யப்பட்ட இறுதி ஆராய்ச்சி அறிக்கை மற்றும் 02 வருட இறுதியில் பகிரங்கப்படுத்தப்பட வேண்டிய அறிக்கை உரிய தரப்பினர்களுக்குச் சமர்ப்பிக்கப்படாமல் அவர்களுக்கு மீளாய்வாண்டிற்குப் பின்பும் உரிய படிகள் தொடர்ந்து செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளிலான நிதி விளைவுகள் ரூபா 135,853,000 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 125,112,000 பற்றாக்குறையாக இருந்தது. அதன்படி, மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 10,741,000 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிச் செயலாற்றல்

பல்கலைக்கழகத்தின் நிதிச் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தால் உழைக்கப்பட்ட வருமானம் 29 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் அதில் உள்ளடக்கப்பட்ட முதலீட்டு வருமானத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடுசெய்த போது ரூபா 186,000 இனால் குறைவடைந்திருந்ததுடன் அது 547 சதவீதமாக இருந்தது. எனினும் முதலீடுகளின் பெறுமதியை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடுசெய்த போது 26 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டின் போது நடைமுறைக் கணக்குகளில் காணப்பட்ட மிகையான மீதிகளை குறுகிய கால முதலீடுகளில் ஈடுபடுத்தி வட்டி வருமானம் உழைக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அச்செயற்பாடுகள் பின்பற்றப்படாமை இந்த நிலைமைக்குக் காரணமாக இருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் மொத்தச் செலவினம் 22 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது அதில் உள்ளடக்கப்பட்ட பிரயாணச் செலவினம் ரூபா 875,000 முதல் ரூபா 1,763,000 வரை 101 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(iii) முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்தபோது சம்பளம் மற்றும் வேதனம், பிரயாணச் செலவுகள் மற்றும் இணைந்த படிகள், வழங்கல் மற்றும் நுகர்வுப் பொருட்கள், ஒப்பந்தச் சேவை, ஏனைய மீண்டெழும் செலவினம் மற்றும் மாணவர் உதவுதொகை போன்ற செலவின விடயங்களில் ரூபா 117,874,295 தேவையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டதுடன் அவற்றின் சதவீதம் 15 முதல் 101 வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ஆ) நிதி நிலைமை

பல்கலைக்கழகத்தின் நிதிநிலைமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் இறுதியில் நடைமுறைச் சொத்துக்களை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்தபோது 132 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் மூலதன முற்பண மீதி ரூபா 59 மில்லியன் முதல் ரூபா 173 மில்லியன் வரை 193 சதவீதத்தால் அதிகரித்தமை இதற்கு தாக்கமளித்திருந்தது.

(ii) நடைமுறைப் பொறுப்புக்களை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது 98 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் பூர்த்திசெய்யப்படாத செயற்பாடுகளுக்கான மூலதன மானியம் 67 சதவீதத்தால் அதிகரித்தமை இதற்கு தாக்கமளித்திருந்தது.

(iii) திரண்ட நிதியம் தொடர்ச்சியாக குறைந்து கொண்டு செல்லும் நிலையில் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் மேலும் ரூபா 134 மில்லியனால் குறைவடைந்திருந்தது. அதன் சதவீதத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது 19 சதவீதமாக இருந்தது.

### 3.3 நிறுவனத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டவிடயங்கள்

பல்கலைக்கழகத்துடன் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 27,000,952 ஒப்பந்தப் பெறுமதியின் அடிப்படையில் குளியாப்பிட்டிய வளாகத்தில் தனியார் விடுதியொன்றை நிர்மாணிப்பதற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு, ஒப்பந்தத்தை இடையில் நிறுத்திய தனியார் ஒப்பந்தக்காரரால், அவரின் பிணை முறிகளின் பெறுமதியான ரூபா 6,000,000 இனை அறவிடுதலைக் கைவிடும் வகையில் 2014 மார்ச் 17 ஆந் திகதி பல்கலைக்கழகத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) ஒரு மாணவனுக்கான கிரயம்

மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் ஒவ்வொரு பீடங்களுக்காக ஏற்பட்டிருந்த செலவினம், மாணவர் எண்ணிக்கை மற்றும் ஒரு மாணவருக்குரிய கிரயம் தொடர்பான தகவல்கள் என்பன கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | பீடம் | விபரம் | முன்னைய ஆண்டு | மீளாய்வாண்டு | அதிகரிப்பு சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | | 2012 | 2013 | |
| | | | ரூபா | ரூபா | |
| (i) | வியாபாரக் கல்வி மற்றும் நிதியியல் பீடம் | செலவினம் | 49,046,407 | 73,543,884 | 50 |
| | | மாணவர் எண்ணிக்கை | 1,042 | 1,312 | 26 |
| | | ஒரு மாணவருக்கான கிரயம் | 47,069 | 56,055 | 19 |
| (ii) | பிரயோக விஞ்ஞான பீடம் | செலவினம் | 59,621,296 | 74,208,889 | 24 |
| | | மாணவர் எண்ணிக்கை | 375 | 428 | 14 |
| | | ஒரு மாணவருக்கான கிரயம் | 158,990 | 173,385 | 09 |
| (iii) | விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடம் | செலவினம் | 65,611,393 | 84,163,292 | 28 |
| | | மாணவர் எண்ணிக்கை | 382 | 439 | 15 |
| | | ஒரு மாணவருக்கான கிரயம் | 171,758 | 191,716 | 12 |
| (iv) | கால்நடை, கடற்றொழில் மற்றும் போசணைப் பீடம் | செலவினம் | 66,078,130 | 82,539,376 | 25 |
| | | மாணவர் எண்ணிக்கை | 314 | 393 | 25 |
| | | ஒரு மாணவருக்கான கிரயம் | 210,440 | 210,024 | - |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 ஆம் ஆண்டின் போது கால்நடை, கடற்றொழில் மற்றும் போசணைப் பீடத்திலும் விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடத்திலும் ஒரு மாணவருக்கான கிரயம் ஏனைய பீடங்களுடன் ஒப்பிடுகின்ற போது உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் அது சதவீதமாக முறையே 34 சதவீதம் மற்றும் 30 சதவீதமாக இருந்தன.

(ii) வியாபாரக் கல்வி மற்றும் நிதியியல் பீடத்தில் 19 சதவீதத்தாலும், பிரயோக விஞ்ஞான பீடத்தில் 09 சதவீதத்தாலும், விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடத்தில் 12 சதவீதத்தாலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்றபோது ஒரு மாணவருக்கான கிரயம் அதிகரித்திருந்தது.

(ஆ) பரீட்சைகளை நடாத்துதலும் பெறுபேறுகளை வெளியிடலும்

2013 ஆம் ஆண்டின் போது பல்கலைக்கழகத்தில் காணப்பட்ட 4 பீடங்களின் மூலம் நடாத்தப்பட்ட பரீட்சைக்காக தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 397 ஆக இருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பல்கலைக்கழகத்தில் கால்நடை, கடற்றொழில் மற்றும் போசணைப் பீடத்தின் மூலம் 2013 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட பரீட்சைக்காக பெறுபேறுகளை வழங்குவதற்கு 13 மாதங்களுக்கு கிட்டிய காலம் எடுத்திருந்ததுடன் வியாபாரக் கல்வி மற்றும் நிதியியல் பீடத்தால் அதற்காக 8 மாதங்களுக்குக் கிட்டிய காலம் எடுக்கப்பட்டிருந்தது.

(ii) பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடங்களினால் 2013 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பரீட்சைகளில் 11 சதவீதத்திற்கு கிட்டிய மாணவர்களின் எண்ணிக்கை பரீட்சைகளில் சித்தியடையாதிருந்ததுடன், வியாபாரக் கல்வி மற்றும் நிதியியல் பீடம் மற்றும் கால்நடை, கடற்றொழில் மற்றும் போசணைப் பீடங்களினால் நடாத்தப்பட்ட பரீட்சைகளில் மாணவர்களின் சித்தியின்மையின் சதவீதம் முறையே 6 சதவீதம் மற்றும் 5 சதவீதமாக இருந்தன.

(இ) இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தில் காணப்பட்ட 04 கல்விப் பீடங்களில் 2011/2012 ஆம் கல்வி ஆண்டிற்காக பதிவு செய்திருந்த 1037 மாணவர் எண்ணிக்கையில் 122 பேர் அதாவது 12 சதவீதத்திற்கு அண்மித்த அளவில் வேறு பல்கலைக்கழகங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன், மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட வசதிகளை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையே அவர்கள் மாற்றலாகிச் சென்றமைக்கான காரணமாக இருந்தது.

(ஈ) இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தில் வியாபாரக் கல்வி மற்றும் நிதியியல் பீடத்தில் மாணவர் எண்ணிக்கை மற்றும் கல்விசார் பதவியணியினர் எண்ணிக்கைக்கிடையே காணப்பட வேண்டிய ஏற்றுக்கொள்ளப்பட்ட விகிதம் 18:1 ஆக இருந்த போதிலும், அதன் உள்ளபடியான விகிதம் 37:1 ஆக இருந்தது. அவ்வாறே விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடத்தில் அந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட விகிதம் 10:1 ஆக இருக்க வேண்டிய போதிலும் உள்ளபடியான விகிதம் 13:1 ஆக இருந்தது. ஏனைய இரண்டு பீடங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விகிதத்தை விட உள்ளபடியான விகிதம் சிறு அளவினால் அதிகரித்திருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற இரண்டு விரிவுரையாளர்கள் வெளிநாடு சென்றபோது இணங்கப்பட்ட உடன்படிக்கையை முறித்தமையின் காரணமாக மேலும் அறவிட வேண்டியிருந்த ரூபா 1,542,625 தொகையினை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளிவாரி விரிவுரையாளர்களால் நிறைவேற்றப்பட்ட விரிவுரைகள் தொடர்பான அறிக்கைப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டமைக்கும் அவர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட உறுதிச்சீட்டுக்களில் காண்பிக்கப்பட்ட பதிவுகளும் இணங்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை மற்றும் மாணவர்கள் கையொப்பமிட்ட பதிவேடுகளில் கையொப்பம் இடப்படாமை மற்றும் மாணவர்கள் கையொப்பமிட்ட பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை போன்ற குறைபாடுகளை மாற்றியமைப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) பல்கலைக்கழகத்தில் நிழற்படப் பிரதிசெய்யும் இயந்திரத்தை சேர்விஸ் செய்வதற்குரிய சேவை உடன்படிக்கைக்காக கொடுப்பனவு செய்யும் போது சேவைகளை வழங்குவதற்கு முன்னர் உரிய நிறுவனங்களுக்கு கொடுப்பனவு

செய்யவேண்டியமையால், பல்கலைக்கழகம் உரிய நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்ய வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்காக சேவைகளை வழங்குவதற்காக ரூபா 821,571 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கையின்படி சேவை வழங்குவதற்காக வருகைதராத சந்தர்ப்பங்கள் தொடர்பாக அதிகாரத்தரப்பினர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) Outreach Center நிதியத்தின் கீழ் 2011 மே 06 ஆந் திகதி மாகந்துர வளாகத்தில் கணக்குப் பிரிவினால் ஆரம்பிக்கப்பட்ட ரூபா 250,000 படியான ரூபா 1,000,000 பெறுமதியான 04 நிலையான வைப்புக்கள் காலாவதியாகும் திகதி குறிப்பிடப்படாதிருந்ததுடன் நிலையான வைப்பு வட்டி 5 சதவீதமாக குறிப்பிடப்பட்டிருந்தது. கடந்த சில வருடங்களில் வங்கி வட்டி விகிதம் மிகவும் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்ட போதிலும் பல்கலைக்கழகத்தால் உரிய பணம் முதலீடு செய்யப்படும் போது உரிய நிலைமை கவனத்திற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்படவில்லை.

(உ) 60 மாணவர்களுக்கு விடுதி வசதிகளை வழங்குவதற்காக ரூபா 2,700,000 வருடாந்த வாடகைக்கு கட்டிடமொன்றை வாடகைக்குப் பெற்ற காரணத்தால் அதில் ஒரு மாணவருக்கான விடுதி வாடகைக் கிரயம் ரூபா 45,000 ஆக இருந்தது. இக்கட்டிடம் இரண்டு மாடிகளைக் கொண்டிருந்ததுடன் ஒரு மாடியில் 75 மாணவர்களுக்கு விடுதிவசதிகளை வழங்கக்கூடியதாக இருந்த போது 60 மாணவர்களுக்காக இரண்டு மாடிகளையும் வாடகைக்கு எடுத்தல் முகாமைத்துவ செயற்திறமையீனமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் முன்னை ஆண்டின் போது இந்த இரண்டு மாடிகளும் தனித்தனியாக வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்ததுடன் ஒரு மாடிக்காகச் செலுத்தப்பட்ட தொகை ரூபா 1,242,000 ஆகும்.

## 4.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

வியாபாரக் கல்வி மற்றும் நிதியியல் பீடத்தில் இரண்டு வெளிவாரி விரிவுரையாளர்களுக்கு கற்பிப்பதற்காக ஒதுக்கப்பட்ட மணித்தியால எண்ணிக்கை 330 ஆக இருந்த போதிலும் அதில் 210.5 மணித்தியாலம் மாத்திரம் கற்பிக்கப்பட்டிருந்தன. 119.5 மணித்தியாலம் குறைவாக கற்பிக்கப்பட்டமையின் காரணமாக மாணவர்களுக்குரிய பாடவிடயங்கள் தொடர்பான அறிவினை வழங்குவதற்காக திட்டமிடப்பட்ட இலக்குகள் அடையப்பட்டதா என்பதை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதிருந்தது.

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

குளியாப்பிட்ட வளாகத்தில் திறந்தவெளி அரங்கத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் பொறியியல் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 7,736,775 ஆக இருந்ததுடன் உரிய கொள்வனவு நடவடிக்கைகள் அமைச்சுக் கொள்வனவுக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்படாது பல்கலைக்கழக கொள்வனவுக் குழுவின் மூலம் மேற்கொள்வதற்காக அந் நடவடிக்கை 03 கட்டங்களின் கீழ் தனித்தனியாக கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 4.5 வெளிப்படையான மோசடிகள்

திறைசேரிச் செயலாளரின் 2011 ஏப்ரல் 07 ஆந் திகதிய 45 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தில் பிரேரிக்கப்பட்ட ஆராய்ச்சிப் படிகள் விரிவுரையாளர்களினால் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் முழுவதும் மீறப்பட்டிருந்தன. அதன்படி 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது தேசிய ஆராய்ச்சி நிறுவனத்தில் முறையே ரூபா 5,000,000 தொகை, ரூபா 4,630,522 தொகைகளைப் பெற்ற பல்கலைக்கழகத்தின் கால்நடை, கடற்றொழில் போசணைப் பீடத்தில் நியமிக்கப்பட்ட ஒரு விரிவுரையாளருக்கும் ஒரு பேராசிரியருக்கும் மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தால் முறையே ரூபா 176,504 தொகை மற்றும் ரூபா 191,672 ஆராய்ச்சிப் படியாகச் செலுத்தப்பட்டிருந்தன.

**4.6 இனங்காணப்பட்ட நட்டம்**

பல்கலைக்கழகத்தால் ரூபா 1,656,000 தொகையான வாடகை செலுத்தும் அடிப்படையில் பெறப்பட்ட 05 வீடுகளில் வாழ்ந்துவருபவர்களினால் வீட்டு வாடகையாக பதவியணியினரினர் விடுதிக்குழுவின் தீர்மானத்தின் படி ரூபா 175,200 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. அதன்படி பல்கலைக்கழகத்திற்கு செலவிடவேண்டியேற்பட்ட மேலதிக கிரயம் ஆண்டிற்கு ரூபா 1,480,800 ஆக இருந்ததுடன் ஆகக் குறைந்தது பொருளாதார வாடகை அறவிடப்பட்டிருக்குமாயின் இந்நட்டத்தை குறைக்கக்கூடியதாக இருந்திருக்கும்.

**4.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குளியாப்பிட்டி வளாகத்தில் மாணவர் விடுதிக் கட்டிடத்தை வாடகைக்கு எடுக்கும் போது அதன் மதிப்பிட்டுப் பெறுமதியை மிகைத்து ரூபா 167,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இயலுமானவரை ஆகக் குறைந்த கிரயத்தில் செயல்நடவடிக்கைகளை மேற்கொள்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருந்த போதிலும் வாடகை அடிப்படையில் கட்டிடத்தைப் பெற்றுக்கொள்ளும் போது ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற கட்டிடத்திற்கான வாடகை வருடாந்த வாடகை மதிப்பீட்டை அடிப்படையாகக் கொள்வதற்குப் பதிலாக மாதாந்த வாடகை அடிப்படை எடுக்கப்பட்டமையால் பல்கலைக்கழகத்திற்கு மேலதிக கிரயமொன்றைச் செய்யவேண்டி ஏற்பட்டிருந்தது.

**4.8 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகந்துர வளாகத்தில் விவாகமாகாத கல்விசார் பதவியணியினர்களுக்கு விடுதி நிர்மாணம்

(i) மேற்கூறப்பட்ட ஒப்பந்தம் 2012 ஆகஸ்ட் மாதமளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் இறுதி வேலை அறிக்கை 2013 மார்ச் மாதத்தின் போதே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்காக காலநீடிப்பு 2014 யூன் 26 ஆந் திகதியே அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ii) நிர்மாண ஒப்பந்தத்திற்காக கொடுப்பனவு செய்யும்போது On Account Payment ஆக ஏதாவது பணம் செலுத்த முடியுமான போதிலும் ஒப்பந்தத்திற்காக அளவிடை அறிக்கையின்றி 2013 திசெம்பர் 23 ஆந் திகதி ரூபா 1,911,073 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) ஒப்பந்த உடன்படிக்கையின்படி விலை முரண்களுக்குரிய கொடுப்பனவுகளுக்கான நிபந்தனை தெளிவாக உள்ளடக்கப்படாதிருக்கும் போது விலை முரண்களுக்காக ரூபா 1,785,119 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நடைமுறைவேலை

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் நடைமுறை வேலையாக ரூபா 291,447,873 பெறுமதியான 26 வேலைகள் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 3,270,150 பெறுமதியான 05 வேலைகளுக்குரிய 2012 திசெம்பர் 31 ஆந்

திகதியில் உள்ளவாறு காண்பிக்கப்பட்ட மீதிகள் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டின் போதும் காணப்பட்ட காரணத்தால் அவ்வேலைகளில் எவ்வித செயல்முன்னேற்றமும் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை.

**4.9 பதவியணியினர் நிருவாகம்**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வயம்ப பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்கைலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பதவியணியினர் 272 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான கல்விசார் பதவியணியினரின் எண்ணிக்கை 219 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் போது சில கற்கைப் பிரிவுகளில் சில விடயங்களுக்காக விஷேட திறன்களையுடைய விரிவுரையாளர்கள் இன்மையின் காரணமாக 44 வெளிவாரி விரிவுரையாளர்கள் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு சம்பளமாக ரூபா 2,928,925 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கையின் படி 26 சிற்றூழியர்களின் வெற்றிடம் காணப்படுவதுடன், அது நாளாந்த நடவடிக்கைகளைச் செய்வதற்காக அவ்வளவாக இடையூறாக இல்லாதிருந்த போதிலும், பல்வேறு காரணங்கள் காண்பிக்கப்பட்டு வெளிவாரி ஊழியர் சேவைகளை வழங்கும் நிறுவனத்திலிருந்து 15 தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டு அவர்களின் சம்பளமாக மீளாய்வாண்டின் போது ரூபா 4,765,596 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) எழுதுவினைஞர் மற்றும் இணையான சேவைகளுக்காக முறையற்ற வகையில் தற்காலிக எழுதுவினைஞர்களாக 05 பேர் இணைப்புச்செய்யப்பட்டிருந்தனர்.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தால் 2010 - 2015 காலப்பகுதியை மேவுகை செய்யும் வகையில் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 2013 - 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியை மேவுகை செய்யும் வகையில் புதிய கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. புதிய கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கும் போது முன்னைய கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த பல்கலைக்கழகத்தின் கற்கை நடவடிக்கைகளுக்கு நேரடியாக தாக்கமளித்த பின்வரும் இலக்குகள் மற்றும் செயற்பாடுகள் கைவிடப்பட்டிருந்தன.

(ஆ) வயம்ப பல்கலைக்கழகத்தால் சமர்ப்பிக்கப்பட்ட 2013 - 2017 இன் புதிய கூட்டிணைந்த திட்டத்தின் படி வயம்ப பல்கலைக்கழகத்தின் சுயமாக உழைக்கப்பட்ட நிதி முதலீடு 15 சதவீதம் முதல் 25 சதவீதம் வரை வருடாந்தம் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும் அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக உத்தேசிக்கப்பட்ட விடயங்களுக்கிடையே கட்டணம் அறவிடப்படுகின்ற பாடநெறிகளுக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்களைச் சேர்த்தல் மற்றும் பதவியணியினரின் விஷேட நிபுணத்துவ அறிவை வெளிச்சமூகத்திற்கு வழங்கும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் அதற்காக உத்தேசிக்கப்பட்ட ரூபா 4 மில்லியன் தொகையான நிதி ஏற்பாடும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

(அ) பல்கலைக்கழகத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவது தொடர்பாக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் முறையாகத் தயாரிக்கப்பட்டிராததுடன் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்கள் காலாண்டு அடிப்படையில் செலவிடப்படுகின்ற முறை தொடர்பான விபரங்கள் மாத்திரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி கட்டிடத்தின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி செய்தலின் கீழ் மீளாய்வாண்டிற்காக ரூபா 59,500,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதி ஏற்பாடு மூலம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்த வேலை விடயங்கள் என்ன என்று திட்டமிடப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது 52 பல்வேறு வேலை விடயங்களுக்காக ரூபா 31,816,149 தொகை அதாவது அதற்கான நிதிஏற்பாட்டில் 64 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது.

(ii) கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 242,000,000 பெறுமதியான வேலை விடயங்களை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் அவற்றின் செயல்முன்னேற்றம் திருப்திகரமான நிலையில் இல்லாமை அவதானிக்கப்பட்டது. அதன்படி, மாகந்துர சுகாதார நிலையத்தை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் 100 சதவீதமும், பிரயோக விஞ்ஞான பீட கட்டிட நிர்மாணத்திற்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து 71.16 சதவீதமும், மாகந்துர தனிநபர் விடுதியை நிர்மாணிப்பதற்கான நிதி ஏற்பாடுகளிலிருந்து 67.57 சதவீதமுமாக 09 வேலை விடயங்களுக்காக வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகளிலிருந்து ரூபா 16,807,559 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. மேலும் கால்நடை, கடற்றொழில் போசணைப் பீடக் கட்டிடத்தின் II ஆம் கட்ட நிர்மாணத்திற்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை விஞ்சி 328.77 சதவீதமும் செலவிடப்பட்டிருந்தன.

**5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

32 செலவின விடயங்களுக்கு மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் 27 செலவின விடயங்களில் பாதீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டை விஞ்சி செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 04 செலவின விடயங்களில் மொத்த நிதி ஏற்பாட்டுத் தொகையும் செலவிடப்பட்டிருக்கவில்லை. அதனால் பல்கலைக்கழகத்தால் வருடாந்த பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை.

**5.4 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய 02 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.3 ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் பிரகாரம், உரிய ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்தால் அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.5 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

வயம்ப பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களுக்கு 2010 - 2011 ஆம் ஆண்டு வரையிலான கால எல்லையில் திரண்ட நிதியத்திலிருந்து ஒரு செயற்திட்ட உத்தேசம் சமர்ப்பித்த விரிவுரையாளருக்கு அச்செயற்திட்டத்திற்காக ரூபா 99,882 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அச்செயற்திட்டத்திற்குரிய ஆராய்ச்சி அறிக்கை 2013 பெப்ரவரி இறுதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2014 யூன் 30 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.6 சுற்றாடல் மற்றும் சமூகப்பொறுப்புக்களை நிறைவேற்றல்

பிரயோக விஞ்ஞான பீடத்தால் வழங்கப்பட்ட பட்டம் விஷேட பட்டமாக இன்மையின் காரணமாக 2007 ஆம் ஆண்டு முதல் இதுவரையிலும் இந்த பீடத்தில் முதலாவது வகுப்பு சித்தியுடன் பொதுப்பட்டம் பெற்று வெளியேறிய 40 பட்டதாரிகளுக்கு அந்தப் பீடத்திலோ அல்லது ஏனைய பல்கலைக்கழகங்களிலோ கல்விசார் பதவியணியில் தொழில்வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தது. அதற்கான காரணமாக வயம்ப பல்கலைக்கழகத்தால் அப்பாடநெறிக்காக விஞ்ஞான விஷேட பட்டப்பாடநெறி ஆரம்பிக்கப்படாதிருந்தமையாகும். அந்தக் காரணத்தின் அடிப்படையில் பல்கலைக்கழகத்தால் அப்பீடத்தில் 2011/2012 கல்வியாண்டு தொடக்கம் 03 விஷேட விஞ்ஞான பட்டப்பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீடு
(ஆ) நூலகப் புத்தகங்களும் சஞ்சிகைகளும் கொள்வனவு
(இ) நிர்மாண ஒப்பந்தம்
(ஈ) முற்பணம் வழங்குதல்
(உ) வெளிவாரிப் பாடநெறிகளை நடாத்துதல்
(ஊ) இருப்புக் கட்டுப்பாடு
(எ) பதவியணியினர்
(ஏ) கொள்வனவு நடைமுறைகள்